வருகிறேம். அரசாங்க நிலத்திலும் ஆராய்ச்சி நடைபெறுகிறது, தனியார் நிலையத்திலும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. மாறுதல் தேவையானல் செய்யப்படும்.

நகராட்சி உறுப்பினர் தொகுதிகளைப் பிரித்தமைத்தல்.

*323 **வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர சபைகளில் உள்ள இரட்டை அங்கத்தினர் வார்டுகளைப் பிரித்தமைக்கும் உத்தேசம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) சட்டம் எண் 17/37-ன் படி 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் திருத்தப்பெற்று அதன்படி நகராட்சிகளில் உள்ள இரட்டை அங்கத்தினர் தொகுதிகள் முறை நீக்கப்பட்டு, ஒற்றை அங்கத்தினர் முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்த நகராட்சிகள் தேர்தலிலிருந்து இம்முறை பின்பற்றப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*324 **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சியில் வார்டுகளை பிரித்தமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இரட்டை மெம்பர் தொகுதிகளை ஒற்றை மெம்பர் தொகுதிகளாக மாற்றுவதற்கு உரிய அடிப்படைக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஏற்கனவே இது சட்டமாக ஆக்கப்பட்டு இரட்டை மெம்பர் தொகுதிகளாக இருப்பதைத் தனித் தனியாகப் பிரிக்க வேண்டு

1973 நவம்பர் 22]

மென்ற முறையில் பரிசீலிக்கப்பட்டு 22—5—1973 தேதியிட்ட அரசாங்க விசேஷ கெஜட்டின் மூலமாக அது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, கோவை நகராட்சியைப் பிரிப்பதற்கு பிரிவினைக் கமிட்டி போட்டு, அது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இப்போது 34-வது வட்டத்தில் சரிபாதி ஹரிஜனங்கள் ஓட்டாக இருப்பதால், அதைத் தனித் தொகுதியாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இப்போது தான் ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தொகுதிவாரி பிரிவினைக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டு வருகிறது. கோவை நகராட்சியிடமிருந்து ஒப்புதல் கேட்டு இன்னும் வரவில்லை. உடனடியாக 15 நாட்களுக்குள்ளே அவர்கள் தீர்மானம் போட்டு கொடுக்காவிட்டால் அரசாங்கமே முடிவு செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு அதுபற்றி முடிவு சொல்லப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த இரண்டு உறுப்பினர் தொகுதிகளைப் பிரிக்க வேண்டுமென்று முறையீடு வந்தது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் யாரிடத்திலிருந்து வந்தது, எதற்காக வந்தது, அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனியாக அது சம்பந்தமாக என்னிடத்தில் குறிப்பு இல்லை. அதைப் பற்றித் தனியாக அறிய வேண்டுமென்று அங்கத்தினர் விரும்பினால், தனியாகக் கொடுக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே சென்னை ஜில்லா நகராட்சிகள் சட்டம் 1928-ன்படி பிரிக்கப்படுகின்ற வார்டுகளில் நகரத்தில் இருக்கும் மொத்த வார்டுகளில் 'ஒன்-போர்த் அப் தி மெம்பர்ஸ் மே பி எலெக்டெட் ஃப்ரம் தி செட்யூல்ட் காஸ்ட்' அல்லது பெண்களிலிருந்து 4-ல் ஒரு பகுதி தேர்ந்தெடுக்கலாம் என்று விதிமுறை இருந்தும், அவ்வாறு அனுமதிக்கப்படாமல் மாயூரம் நகராட்சியில் இருக்கிறது என்பதை அரசாங்கம்

அறியுமா ? இப்படி 'ஒன் பேர்த் ஆப் தி மெம்பர்ஸ் மே பி எலெக்டெட்' என்று இருப்பதை 'ஒன் போர்த் ஆப் தி மெம்பர்ஸ் ஷல் பி எலெக்டெட்' என்று மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, மாயவரம் நகர மன்றத்தைப் பொறுத்தவரை மக்கள் தொகையில் மாற்றம் இல்லை. அதனால் தான் தொகுதியை எப்படிப் பிரிக்க வேண்டுமென்று ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது. 16—10—1973 அன்று அனுப்பி வைத்ததற்கு இன்னும் பதில் வரவில்லை. 30 நாட்களுக்குள் அனுப்ப வேண்டுமென்று மீண்டும் அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் வந்த பிறகு அது பரிசீலிக்கப்படும். இது மாயவரத்திற்கு மட்டுமின்றி தமிழ்நாட்டிலே உள்ள எல்லா இடங்களுக்கும் பொருந்தும். 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்தான் இப்போது அமலில் இருக்கிறது. அதிலே இப்போது மாற்றம் ஒன்றும் இல்லை.

திரு. என். இராஜாங்கம் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த இரட்டை மெம்பர் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்களும், மற்றவர்களும் சேர்ந்து நிற்கும் தொகுதிகளாகவும், அல்லது பெண்களும் ஆண்களும் சேர்ந்து நிற்கும் தொகுதிகளாகவும் கணக்கிடப்பட்டு இன்று இருக்கிறது. இது ஒரு மெம்பர் தொகுதிகளாக மாற்றப்பட்டால், தாழ்த்தப்பட்டவர்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் தேர்ந்தெடுக்கப் படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனியாகப் பிரிக்கப் பட்டால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களும், பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் பெண்களும் தான் நிற்க முடியும். வேறு யாரும் நிற்க முடியாது.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, இம்மாதிரியான இரட்டை மெம்பர் தொகுதி ஒழிப்பு ஒரு சில நகராட்சிகளுக்கு மட்டுமா அல்லது தமிழகம் பூராவிற்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 22]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தமிழ்நாடு பூராவிற்கும் இது அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது அடுத்த தேர்தல் இந்த முறையில் தான் நடைபெறும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, சென்ற முறை பஞ்சாயத்து தேர்தலை நடத்துவதற்கு முன்னால் வாக்காளர்களினால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சட்ட மன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது, அடுத்த நகரசபைத் தேர்தல்களில் வாக்களர்களே நகரசபைத் தலைவர்களை நேரடியாக தேர்ந்தெடுக்கும் முறையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது எந்த நிலையில் உள்ளது. வருகின்ற நகரசபைத் தேர்தலில் வாக்காளர்களே நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி அறிவிக்கப் பட்டது எனக்குத் தெரியாது. ஆனால் அப்படி ஒரு கோரிக்கை சொல்லப்பட்டது. அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு ஏற்கனவே இப்பொழுது தேர்ந்தெடுக்கப்படுவதிலே சில மாற்றங் கள் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிற காரணத்தினால், உடனடியாக இந்தத் தேர்தலில் அந்த மாற்றத்தைக் கொண்டு வர இயலாது என்பதை அரசு அறிவித்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: மாயூரம் நகராட்சியில் 22 உறுப்பி னர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய கட்டத்தில் கூட ஒரு ஆதித் திராவிடருக்கும், ஒரு பெண்ணுக்கும் இடம் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது 32 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அளவுக்கு ஜனத்தொகை பெருகியிருப்பதன் காரணமாக நிலைமை இருந்தாலும், அதே விகிதாசாரத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவருக் கும், ஒரு பெண்ணுக்கும் மட்டும் இடம் தர இருக்கிறார்கள் என் பதை நகராட்சி மன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் அறி வேன். எனவே, பக்கத்தில் இருக்கிற நாகப்பட்டினம், கும்ப கோணம் ஆகிய பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதே போல் மாயூரம் நக ராட்சியிலும் தாழ்த்தப்பட்டவருக்கு ஒரு இடம் என்று இருப் பதை இன்னும் ஒன்று கூட்டி, அதிகமாக ஒதுக்குவதற்கு இந்த அரசின் மனம் இசையுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1973 நவம்பர் 22

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே ஒதுக்கப் பட்ட தொகுதிகளைத் தான் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர, புதியதாக எதற்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. எதற் கும் தனியாகச் சலுகை அளிக்கப்படவில்லை. எனவே, மாயூரத் திற்கும் தனிச் சலுகை வழங்கப்படுவதற்கு இயலாது.

கோவையை மாநகராட்சியாக்கல்

*** 325 வினா.—திரு. சு. துரைசாமி**
திரு. ரா. ரா. முனுசாமி
திரு. பெ. சௌந்திரபாண்டியன்
திரு. வை. பால்சுந்தரம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையை மாநகராட்சியாக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) கோவை நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தும்படி கோரி கோவை நகர் மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி யுள்ளது. சிங்காநல்லூர் நகராட்சியும், கோவை, சிங்காநல்லூர் ஆகிய இரண்டு நகராட்சிகளையும் ஒருங்கிணைத்து மாநகராட்சியாக உயர்த்தும்படியும் கோரி தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : வர இருக்கிற நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களுக்குள் கோவையை மாநகராட்சியாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. அதில் தாமதம் ஏற்படுமானல் கோவை நகராட் சித் தேர்தல் நடத்தப்படும். மாநகராட்சித் தேர்தல் இப்பொழுது இல்லை.